## திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்களை விளக்கி பிரச்சாரம்! – முத்தமிழறிஞர்

# கலைஞர் பிறந்தநாள் : தமிழ்நாடு முழுவதும் தெருமுனைக் கூட்டங்கள்!

## துணை முதல்வர் – இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இளைஞரணி ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!

**திருச்சி, மே 26–**

**கழக இளைஞர் அணி மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் கழக இளைஞரணி செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திருச்சியில் நேற்று நடைபெற்றது.**

**இக்கூட்டத்தில் திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்களை விளக்கி பிரச்சாரம் மேற்கொள்வது என்றும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை தமிழ்நாடு முழுவதும் தெருமுனைக் கூட்டங்கள் கூட்டி சிறப்பாக கொண்டாடுவது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

**இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–**

தி.மு.கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டம் அணியின் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில், மாநில துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா. இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், பிரபு கஜேந்திரன், பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா, சி.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலையில் திருச்சியில் நேற்று (25.05.2025) காலை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

**தீர்மானம் 1:**

**பெகல்ஹாம் பயங்கரவாத தாக்குதலில் இறந்த அப்பாவி மக்களுக்கு, அஞ்சலி!**

பெகல்ஹாம் பயங்கரவாத தாக்குதலில் இறந்த அப்பாவி பொது மக்களுக்கும், ஆபரேஷன் சிந்தூரில் வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்களுக்கும், தனது ஆழ்ந்த இரங்கலையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்ளும் கழக இளைஞர் அணி நிர்வாகிகளின் இந்தக் கூட்டம், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு, பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் 2:**

**வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு!**

‘மக்கள் பிரதிநிதிகளால் நடத்தப்படும் சட்டப் பேரவையைவிட, ஆளுநர் என்பவர் மேலானவர் அல்ல’ என்பதை உறுதிப்படுத்தும் வகையில், மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க, ஆளுநருக்கும் குடியரசுத் தலைவருக்கும் காலவரம்பை நிர்ணயம் செய்ததுடன், அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 142ஐ பயன்படுத்தி, ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டிய 10 மசோதாக்களுக்கும், ஒப்புதல் வழங்கிய மாண்பமை உச்சநீதிமன்றத்துக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாமல், இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களின் உரிமைகளையும் நிலைநாட்டும்வகையில், இந்திய நீதித்துறை வரலாற்றில், முன் உதாரணமான வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்ப்பைப் பெற்றுத்தந்த கழகத்தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்தக் கூட்டம், பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

**தீர்மானம் 3:**

**கூட்டாட்சித் தத்துவத்துக்கு விரோதமாகச் செயல்படும் அரசியல் சக்திகளுக்குக் கண்டனம்!**

மாநில உரிமைகளுக்கான மைல்கல்லாக விளங்கும் மாண்பமை உச்சநீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கும் வகையில், குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசுத் துணைத் தலைவர், ஆகியோரைத் தவறாகப் பயன்படுத்தும் ஒன்றிய அரசையும், மாண்பமை உச்சநீதி மன்றம் அளித்த தீர்ப்பையே கேள்விக்குறியாக்கும் விதமாக குறுக்கு வழியை நாடும், கூட்டாட்சித் தத்துவத்துக்கு விரோதமான சக்திகளையும், இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

**தீர்மானம் 4:**

**பா.ஜ.க. அரசின் அடக்குமுறைக்கு எதிராக, சட்டப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வரும் முதலமைச்சருக்குப் பாராட்டு!**

‘மும்மொழிக்கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான் தமிழ் நாட்டுக்கு வழங்க வேண்டிய 2,152 கோடி ரூபாய் நிதியை வழங்குவோம்’ என்ற ஒன்றிய அரசின் அடாவடிப் போக்கிற்கு எதிராக மாண்பமை உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறோம்.

ஆளுநருக்கு எதிரான வழக்கில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பைப் பெற்றதைப் போலவே, கல்வி நிதிக்கான சட்டப் போராட்டத்திலும், சிறுபான்மையினர் நலன் காக்க, ஒன்றிய அரசின் வக்பு வாரிய சட்டத் திருத்தத்திற்கு எதிரான போராட்டத்திலும், கழகத்தலைவர் வெற்றிபெற கழக இளைஞர் அணி சார்பில், வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தீர்மானம் 5:**

**இந்திய ஒன்றியத்திலேயே ‘நம்பர்–1’ மாநிலமாக தமிழ்நாட்டைக் கட்டமைத்து வரும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி!**

இந்திய ஒன்றியத்தில் பல்வேறு துறைகளில் முதன்மை மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாடு 9.69% என்ற பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளது.

அ.தி.மு.க.வின் 10 ஆண்டு கால இருண்ட ஆட்சியில், சராசரியாக 1.36 சதவிகிதமாக இருந்த வேளாண் வளர்ச்சி, திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பின், வேளாண் துறைக்குத் தனி பட்ஜெட் வகுத்து, சிறப்பான திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தியதன் விளைவாக 5.66 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

மேலும் திராவிட மாடல் ஆட்சியின் சீரிய முன்னெடுப்புகளால் 20202021இல் 26.15 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இருந்த ஏற்றுமதி மதிப்பு, 20242025இல் 52.07 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இருமடங்காக உயர்ந்து சாதனை படைத்துள்ளது.

இப்படி அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உயர காரணமான ‘திராவிட மாடல் நாயகர்’, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறது.



**தீர்மானம் 6:**

**குடிமைப்பணித் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்குப் பாராட்டு!**

இந்த ஆண்டு வெளியான குடிமைப்பணித் தேர்வு முடிவுகளில் ‘நான் முதல்வன் போட்டித் தேர்வு’பிரிவில் பயின்று தேர்வான 50 போட்டியாளர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இத்திட்டம் மிகச்சிறப்பாக செயல்பட காரணமாக உள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் இந்தக் கூட்டம் பாராட்டுகிறது.

**தீர்மானம் 7:**

**பொள்ளாச்சி பாலியல் வழக்கில், நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்கிறோம்!**

‘பொல்லாத ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி’ என்பதற்கேற்ப, எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் நூற்றுக்கணக்கான இளம் பெண்கள், அ.தி.மு.க. நிர்வாகிகளாலும், அவர்களின் ஆதரவாளர்களாலும் பாலியல் வன்முறைக்கு ஆளானார்கள். பாலியல் குற்றவாளி களைப் பாதுகாக்கும் நோக்கத்தில், பாதிக்கப்பட்டவர்களையே மிரட்டும் வேலைகளில் எடப்பாடி பழனிசாமியின் காவல்துறை ஈடுபட்டது.

‘தி.மு.க. ஆட்சி அமைந்ததும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி கிடைக்கும், அதற்கு கழக அரசு துணை நிற்கும்’ என்று கழகத் தலைவர் அளித்த வாக்குறுதியின்படியே, இன்று அ.தி.மு.க. முன்னாள் நிர்வாகி உட்பட 9 பாலியல் குற்றவாளிகளுக்கு சாகும்வரை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டிருப்பதை இந்தக் கூட்டம் வரவேற்கிறது.

**தீர்மானம் 8:**

**தமிழ்நாட்டின் வரலாற்றை மறைக்கத் துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குக் கண்டனம்!**

தமிழர்களின் நகர நாகரிகம் 2,200 ஆண்டுகளுக்கு முந்தையது என்பதை ஆதாரபூர்வமாக நிறுவும் கீழடி அகழாய்வு அறிக்கையை ஆய்வாளர் அமர்நாத் இராமகிருஷ்ணன் அவர்கள், 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒன்றிய தொல்லியல் துறைக்கு சமர்ப்பித்தார். ஆனால், ஒன்றிய தொல்லியல் துறை அந்த ஆய்வறிக்கையை வெளியிடாமல், தாமதப்படுத்தியது மட்டுமல்லாமல், நாடாளுமன்றத்தில் இது குறித்து கேள்வி எழுப்பிய போது ‘விரைவில் வெளியிடப்படும்’ என்று கூறிவிட்டு, தற்போது அந்த அறிக்கையைத் திருப்பி அனுப்பி, திருத்தங்களைக் கோரியுள்ளது.

தமிழர்களுக்கு என்று தொன்மையும் சிறப்பும் வாய்ந்த ஒரு நாகரிகமும், வரலாறும் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள மனமில்லாமல், தமிழ்நாட்டின் வரலாற்றை மறைக்கத் துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

**தீர்மானம் 9:**

**செம்மொழி நாள்!**

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா இந்த ஆண்டு முதல் ‘செம்மொழி நாளாக’ கொண்டாடப்படும் என்று அறிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

**தீர்மானம் 10:**

**ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர்–கள், துணை அமைப்பாளர்கள் நியமனத்திற்குப் பாராட்டு!**

களச் செயல்பாடுகள், மாவட்டச் செயலாளர்களின் பரிந்துரை, நேர்காணல்கள் என்று பல்வேறு படிநிலைகளில் மிகவும் கவனமாக பரிசீலித்து, 76 கழக மாவட்டங்களில் 12,000க்கும் அதிகமான ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்களைத் தேர்வுசெய்து இளைஞர் அணியின் கட்டமைப்பை தமிழ்நாடு முழுவதும் வலுப்படுத்திய கழக இளைஞர் அணிச் செயலாளர் - மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு இந்தக் கூட்டம் நன்றியையும், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகிகளுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் 11:**

**234 தொகுதிகளிலும் கண்டன பொதுக் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்தியுள்ள நிர்வாகிகளுக்குப் பாராட்டு!**

தொகுதி மறுசீரமைப்பு, தமிழ்நாட்டுக்கு நிதி வழங்குவதில் ஒன்றிய அரசின் பாரபட்சம், இந்தித் திணிப்பு ஆகியவற்றுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டங்களை, தமிழ்நாடு முழுவதும் உள்ள 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் மிகச்சிறப்பாக நடத்தி முடித்துள்ளகழகஇளைஞர்அணிநிர்வாகிகளுக்குப் பாராட்டுகளையும், முழு ஒத்துழைப்பை நல்கிய மாவட்டஒன்றியநகரபகுதிபேரூர் செயலாளர்களுக்கு நன்றியையும் இந்தக் கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் 12:**

**தமிழர் நலன் காத்த முத்தமிழறிஞர் கலைஞரின் புகழைப் பரப்பும் வகையில் தெருமுனைக் கூட்டங்கள்!**

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு முழுவதும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களைக் கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கவேண்டும் என்றும், தமிழர் நலன் காத்த கலைஞர் அவர்களின் புகழ் பரப்பும் வகையிலும், திராவிட மாடல் அரசின் நலத் திட்டங்களை விளக்கியும் கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு அனைத்து ஒன்றியநகரபகுதிபேரூர்களில் தெருமுனைக் கூட்டங்களை நடத்த வேண்டும் என்றும் இளைஞர் அணி நிர்வாகிகளை இந்தக் கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் 13:**

**களத்திற்கு நிகராக சமூக வலைத்தளங்–களிலும் களமாட உறுதியேற்போம்!**

நவீன அரசியலின் பரப்புரைக் களமாக உருவாகி இருக்கும் சமூக வலைத்தளங்களில், நமது இளைஞர் அணி சிறப்பாகச் செயல்பட மாவட்ட, மாநகர நிர்வாகிகளைத் தொடர்ந்து, புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்துணை அமைப்பாளர்களுக்கும், தொகுதிவாரியாக பாக இளைஞர்களுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சியை, சீரிய முறையில் வழங்கி வருகிறோம்.

கழகத்தின் கொள்கைகளையும் திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் அனைவருக்கும் கொண்டு சேர்க்கும் வகையில், களத்திற்கு நிகராக சமூக வலைத்தளங்களிலும் களமாட, கழகத் தகவல் தொழில் நுட்ப அணியுடன் இணைந்து, கழக இளைஞர் அணி பணியாற்றும் என இக்கூட்டம் உறுதியேற்கிறது.

**தீர்மானம் 14:**

**இளைஞர் அணியின் எதிர்கால பணிகளை விரைந்து மேற்கொள்வோம்!**

தமிழ்நாடு முழுவதும் 76 கழக மாவட்டங்களில் வார்டு, கிளைகளில் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை நியமிப்பது, அவர்களின் மூலம் இல்லந்தோறும் சென்று புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது, சட்டமன்றத் தொகுதிகளில் திறக்கப்படாமல் உள்ள ‘கலைஞர் நூலகங்கள்’ஐ திறப்பது ஆகிய பணிகளை, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்களின் ஒத்துழைப்புடன் விரைந்து மேற்கொள்ளுமாறு இளைஞர் அணி நிர்வாகிகளை இந்தக் கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் 15:**

**எல்லார்க்கும் எல்லாம் தரும் திராவிட மாடல் அரசு, மீண்டும் ஆட்சிக்கட்டிலில் அமர உறுதியேற்போம்!**

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நம் திராவிட மாடல் அரசு 2026சட்டமன்றத் தேர்தலில் வென்று, மீண்டும் ஆட்சிப்பொறுப்புக்கு வர நம் செயலாளர் அவர்களின் தலைமையிலான நம் இளைஞர் அணி எல்லா வகையிலும் துணை நிற்கும் என்று இந்தக் கூட்டம் உறுதியேற்கிறது.

வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு!!

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட தி.மு.க. சார்பில் 2026 பொது தேர்தலை முன்னிட்டு 5 சட்டமன்றத் தொகுதி வாரியாக தேர்தல் பணிக்குழு அமைப்பது குறித்து ஒன்றிய, நகர ,பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி, மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன், தேர்தல் பொறுப்பாளர் கார்த்திக், மாவட்ட துணைச் செயலாளர் ஜி.எஸ்.அரசு, டாக்டர் பிரமோத்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சரும் ,கழகத் தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு மாவட்டம் நீர்வளத்துறை சார்பில் காலிங்கராயன் வாய்க்கால் வலது கரையில் அமைந்துள்ள பேபி வாய்க்காலில் சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்திற்கு தூர்வாரும் பணியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகரக் கழகச் செயலாளர் மு.சுப்ரமணியம், பகுதிக் கழகச் செயலாளர் குமாரவடிவேல், மாமன்ற உறுப்பினர் குட்டி (எ) ஜெகதீஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், துறை சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.